TAMIL NADU LEGISLATURE LIBRARY
2 3 JUL 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1970 மார்ச் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினரும் அமைச்சருமான திரு. எஸ். இராமநாதன் அவர்களின் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1937-லிருந்து 1939-வது ஆண்டு வரை மாயூரம் பொதுக் கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினராகவும், பொதுச் செய்தித் துறை அமைச்சராகவும் இருந்த திரு. எஸ். இராமநாதன் அவர்கள் 9—3—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இப் பேரவையின் நிகழ்ச்சியைப் பதினைந்து நிமிடங்கள் ஒத்திவைக்கின்றேன்.

பேரவை காலை 9-15 வரை ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் காலை 9-15 மணியளவில் கூடியது.

(2) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

வட்ட மருத்துவ மனைகளுக்கு எக்ஸ் கதிர் வீச்சுப் பிரிவுகள்

*369 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட்ட மருத்துவ மனைகளில் எக்ஸ் கதிர் வீச்சுப் பிரிவுகளைத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: எக்ஸ் கதிர்வீச்சுக் கருவிகள் தாலுக்கா தலைமை மருத்துவ நிலையங்களில் படிப்படியாக நிதி நிலையைப் பொருத்து நிறுவப்பட்டு வருகின்றன.